Registered as a News Papeř

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 19 (04 - 11 - 1992) புதன்கிழமை ஓசை 260

## வவுனியா மக்களுக்கு புனர்வாழ்வு பணம் நிறுத்தம்

வவுனியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 90 ஆம் ஆண்டிற்கு முன்னர் புனர்வாழ் அட்டை வழங்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு நிவாரணப்பணம் இல்லை என வவுனியா செயலகம் நிராகரித்துள்ளது 90 ஆம் ஆண்டிற்கு முன்னர் பாதிப்படைந்து புனர்வாழ்வு அட்டை வைத்திருப்பவர்கூட புதிய புனர்வாழ்வு அட்டை பெற்றிருந்தால் மட்டுமே புனர்வாழ்வு பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது மிகக் குறுகியதொகையின ருக்கு மாத்திரம் புனர்வாழ்வு அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பெரும்பாலானோர் தமது வேதனையை வெளிப்படுத்த முடியாமல் அலைகின்றனர்.

### (அம்பாறையில் புலிகள் வீரசாதனை)

# விமானப்படை ரோந்து அணி சிதறடிப்பு;

# 25 ஆயுதப்படையினர் ஸ்தலத்தில் பலி

## அரந்தலாவையில் துணிகர அதிரடி

[கொழும்பு]

அம்பாறை மாவட்டம் அரந்தலாவையின் வடக்கே சிறிலங்கா ஆயுதப்படையினரின் ரோந்து அணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் இருபத்தைந்து ஆயுதப்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இதில் 18 பேர் விமானப்படையைச் சேர்ந்தவர்களாவர்.

நேற்றுக் காலை 8-30 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்தது. ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த அணி ஒன்றே புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பாதுகாப்பு வட்டாரங்களின் தகவலின்படி புலிகளின் இவ் அதிரடியில் பதின்மூன்று விமானப்படையினரும், பத்து பொலிஸாரும், இரண்டு இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக பி. பி ஸி. அறிவித்தது.

### வீரச்சாவு



லெப். உருத்திரன்

22-10-1992 அன்று ஆனையிறவு உப்பள பகுதி காவலரண்கள் மீதான தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்த விடுதலைப் புலிகள் போராளியான லெப்டினன்ட் உருத்திரன் (தர்மானந்தன் அனுராஜ், கம்பர்மலை, அத்தியடி, வல்வெட்டித்துறை) 02-11-1992 அன்று வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பொலிஸ்மீது தாக்குதல் கடற்படையினர் கைது

ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கோஷ்டியினரை தாக்கியதாக நான்கு கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்

கடந்த வியாழன் இரவு கொழும்பு கோட்டைப் பகுதியில் சிவில் உடையில் பொலிஸ் குழுவை எதிர் கொண்ட ஆறு கடற்படையினரும் மது போதையில் காணப்பட்டதுடன் பொலிசாருடன் தகராறில் ஈடுபட்டு தாக்கத் தொடங்கியுள்ளனர்,

மூன்று பொலிஸார் கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் கைதான நால்வரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## பெண்மீது பாலியல் வன்முறை ராணுவ கோப்ரல் கைது

(வவுனியா)

இளம் பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்குட்படுத்த முனைந்த இராணுவ கோப்ரல் ஒருவர் மடுகந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் கையும் மெய்யுமாக பிடிபட்டார் மேற்படி சம்பவம் வவுனியா கொறவபொத்தான வீதியில் 4 ஆம் கட்டையில் நடைபெற்றது

ஏற்கனவே இப்பெண்ணின் வீட்டில் பணமும் தங்க நகைகளும் திருடியது தொடர்பாக விசாரணை செய்ய வந்ததாக கூறி மேற்படி செயலில் இராணுவ கோப்ரல் ஈடுபட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2500 ஆசிரியர்கள் நியமனமாவர்

மிக விரைவில் 2 500 ஆசிரியர்கள் சேர்த்து கொள்ள இருப்பதாக கல்வி சேவைகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பில் முகாமைக் கைவிட்டு இராணுவம் பின்வாங்கியது

(மணலாறு)

மணலாற்றில் அலம்பில் கிராமத்தில் முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன் தினம் காலை முகாமைக்கைவிட்டு பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

முன்னேறமுற்பட்டனர். இவர்கள் மீது புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலால் பெரும் இழப்புக்களைச் சந்தித்த இராணுவத்தினர் முயற்சியைக் கைவிட்டு அலம்பிலில் முகாம் ஒன்றை அமைத்துக்கொண்ட

னேறும் முயற்சியைக்கைவிட்டு இராணுவத்தினர் அலம்பில் பகுதியில் நிரந்தர முகாமை அமைத்துக்கொண்டனர் இம் முகாம் மீது விடுதலைப் புலி வீரர்கள் தொடர்ந்து மேற்கொண்ட அதிரடித்தாக்குதல்

# காங்கேசன்துறை - காரைநகர்

# கடற்படை தளங்கள் விரிவாக்கம்

(கொழும்பு)

வடபகுதிக் கடலில் ரோந்து நடவடிக்கையைத் தீவிரமாக்கவும், புலிகளின் நடமாட்டத்தைத் தடை செய்யவும் சிறிலங்கா கடற்படை அதன் பலத்தை அதிகரிக்கவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்தின் பலத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் துறைமுகத்தில் கடற்படைப் படகுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளன. மேலதிகமாக காங்கேசன் துறைக் கடற்படைத் தளத்துக்கு அனுப்பப்படவுள்ள படகுகள் இப்போதுள்ள கடற்படைப் படகுகளுக்கு ஆதரவாகச் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காரைநகர் எல்லாளன் கடற்படைத்தளத்தைச் சீர்படுத்தி விருத்திசெய்வதோடு காரைநகர்க் கடற்படைத்தளத்தை அணுகும் கடல் வழியையும் பலப்படுத்துவது குறித்து யோசனை செய்யப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடபகுதிக் கடல் பிரதேசத்தில் கடற்புலிகளுக்கு எதிரான நடவடிக்கையைப் பலப்படுத்த இந்த இரண்டு கடற்படைத் தளங்களையும் சீர்படுத்துவது அவசியம் என்று அதே வட்டாரங்கள் கூறுகின்றன.

இப்போது வடபகுதிக் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிக்கும் கடற்படையின் தாய்க் கப்பல்கள், பீரங்கிப் படகுகள், அதிவேக ரோந்துத் தாக்குதல் படகுகள் ஆகியன திருக்கோணமலைத் தளத்திலிருந்தே இப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன. திருக்கோணமலைத் தளம் சிறிலங்கா கடற்படையின் பாரிய தளமாக இருப்பதோடு, இங்கு கிழக்கு கடல் பிரதேசக் கட்டுப்பாட்டுத் தலைமைச் செயலகமும் அமைந்துள்ளது. இத் தளத்தில் கப்பல் திருத்தும் வேலையுடன் கூடிய அனைத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

முகாமைக்கைவிட்டு பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 28-ம் திகதி முல்லைத்தீவு முகாமில் இருந்து பெருந்தொகையான இராணுவத்தினர் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவியுடன் கவச வாகனங்கள் சகிதம் மணலாறு நோக்கி

... ஒன்றை அமைத்துக்கொண்டனர்

சில தினங்களின் பின்னர் அலம்பிலிலிருந்து குமுழமுனை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களைமேற்கொண்டதால் முன்

... கொண்ட அதிரடித்தாக்குதல்களால் பீதியுற்ற படையினர் நேற்றுமுன்தினம் முகாமைக் கைவிட்டுப் பின்வாங்கிச்சென்றுள்ளனர்

மணலாற்றை முற்றுகையிட சிறிலங்கா இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 'கந்துல' கப்பல் மூழ்கியதால் படையினருக்கு விநியோகம் பாதிப்பு

## மற்றொரு கப்பலும் பழுது

[கொழும்பு]

சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான ''கந்துல'' கப்பல் புத்தளமருகே மூழ்கியதன் மூலம் மன்னார், முல்லைத்தீவு, ஆனையிறவு, பூநகரி மற்றும் குடாநாட்டின் பெரும்பாலான இராணுவ முகாம்களுக்கான விநியோகம் பலத்த பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அதுவும் பெரும்பாலான இராணுவ முகாம்களுக்கு கடல்வழியாகவே விநியோகம் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இக் கப்பல் மூழ்கியிருப்பதால் கடற்படையும், விமானப் படையும் விநியோகங்களைச் சீராக்குவதற்கே சிரமப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தரையிறக்கும் கப்பல்களில் மூன்றை மட்டுமே கொண்ட சிறிலங்கா கடற்படைக்கு 'கந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதியில் பாரிய தாக்குதல்; ஹமில்டனிடம் புதிய திட்டம்

## திகதி குறிப்பதில் தாமதமாம்

(கொழும்பு)

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா முப்படைகளின் முழுக் கட்டுப்பாட்டையும் தனது தலைமையின் கீழ் எடுத்துக்கொண்ட பிறகு வடபகுதி மீது பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது

வடபகுதி இராணுவ நடவடிக்கை பற்றிய ஹமில்டனின் திட்டம் கடந்த 27 ஆம் திகதி பாதுகாப்புச் சபையில் தீர்மானிக்கப்படவிருந்தது

பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள இருந்த ஜனாதிபதி பதுளைக்குச் சென்றிருந்தார். பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கூட்டுப்படைத் தளபதி உட்பட உயர் அதிகாரிகள் எல்லைக் கிராமப் பாதுகாப்பு பற்றி ஆராய அம்பாறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய யுத்திகளை கையாள இராணுவ தரப்பில் யோசனை

## இராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)

கடந்த ஆறுமாதங்களில் படையினருக்கு ஏற்பட்டுள்ள இழப்பைத் தொடர்ந்து படையினர் புதிய தந்திரோபாயங்களை கையாள நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அவ் அதிகாரி கூறுகையில்; சிறிது சிறிதாக புதிய இடங்களை கைப்பற்றும் தந்திரோபாயத்தில், புதிய முன்னணிக் காவலரண்கள் அமைக்கப்படும் போது அவற்றை புலிகள் தாக்கி அழிப்பதால், தாக்கிவிட்டு முகாம் திரும்பும் தந்திரோபாயமே கைக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந் நடவடிக்கை இந்த மாத நடுப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் மழைக்காலம் ஆரம்பித்த பின்னர் தாக்குதல்களை நடாத்துவது சிரமமாக இருக்கும்.

அத்துடன் விமானத்தாக்குதல் நடத்தி புலிகளை பலவீனப்படுத்த வேண்டிய நிலையில் படையினர் உள்ளனர். இதற்கு போக்குவரத்திலுள்ள சிரமமும், குண்டு வீச்சிற்கு பெருமளவு பணம் செலவாவதும் தடையாக உள்ளது என்றார்.

இந்நிலையில் விமானத்தாக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

வவுனியா செல்லத் தவறியோருக்கு

# ஆசிரியர் நேர்முக பரீட்சை திருமலையில் நடைபெறும்

(திருமலை)

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 36 பரீட்சார்த்திகளில் 5 தமிழ் பரீட்சார்த்திகளும் 2 முஸ்லிம் பரீட்சார்த்திகளுமே நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பதினொரு பேரில் ஒருவருமே நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நேர்முக பரீட்சைக்கு சமுகமளிக்காத அனைவரும் திருக்கோணமலையில் உள்ள மாகாண கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி வட-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சி. கமலநாதன் அறிவித்துள்ளார்.

# புதிய யாழ். ஆயர் இன்று பதவி ஏற்பு

## நாளை சிறப்பு நிகழ்ச்சிகள்

(குருநகர்)

யாழ். ஆயர் பதவி ஏற்பு சிறப்பு நிகழ்ச்சிகள் நாளை பேராலயத்திலும், வெளியரங்கிலும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது.

கலாநிதி தோமஸ் சவுந்கரநாயகம் ஆண்டகை யாழ். ஆயராக நியமனம் பெற்றது அறிந்ததே.

இதேவேளை பதவியேற்பு சட்டபூர்வமான நிகழ்வுகள் இன்று மாலை 4 00 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் மேற்றாசன ஆலோசனை சபை முன்னிலையில் நடைபெறும்

ஓய்வுபெறும் முன்னாள் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நியமனம் பெற்றுள்ள புதிய ஆயரிடம்



பொறுப்புகளை இன்று கையளிப்பாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# வரி விளம்பரம்

## வெளிவந்துவிட்டது

''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறு கதை, பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, கட்டுரைகள், சுவையான பதினங்கள் போன்றவற்றைக் கொண்டு வெளிவந்துவிட்டது ரூபா 10/- ஆண்டுச் சந்தா ரூபா 35/- பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (3542)

## பற் சிகிச்சை நிலையம்

பற்சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக்கல் லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தினசரி 4 பி. ப. —6 பி. ப. ஞாயிறு: 10 மு. ப. —2 பி. ப. (3215)

## விற்பனைக்கு

தரமான தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. டில்கா வாச் வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5344)

## விற்பனைக்கு உண்டு

பிறவுண், கறுப்பு, வெள்ளை சேவல், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மார்க்கற் லேன், மானிப்பாய். (3562)

## விற்பனையாகின்றது

சைவநெறி ஆண்டு 10—11, கந்தபுராணம் உற்பத்தி காண்டம், கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் (ஆறுபடை வீடு), சித்திரம் ஆண்டு 11. வாலி-உரையுடன் விற்பனையாளர்களுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3545)

## விற்பனையாகின்றது

மொத்தமாகவும் சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும், ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை யாழ்ப்பாணம். (3546)

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

## வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போத்தல்கள், நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளப்படும் உடனடியாக தேவை. வேலவன் ஸ்ரோர்ஸ், நல்லூர் கோயில் முன்பாக. (3572)

## தவறிவிட்டது

தாவடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்திலிருந்து கோண்டாவில் - இருபாலை வீதியூடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்லும் பாதையில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் M. P. நாதன் தாவடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (3574)

# உட்கட்சிப் பூசலை தீர்க்க மூத்தஉறுப்பினர்கள் முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருக்கும் உட்கட்சிப் பூசலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சமரச முயற்சியில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மூத்த தலைவர்களைக் கொண்ட சமரச முயற்சிக் குழு திருமதி பண்டாரநாயக்காவைச் சந்தித்து இருமணி நேரம் கலந்துரையாடியதுடன் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுராபண்டாரநாயக்காவையும் சந்தித்து பேச்சுவார்த்தைநடாத்தியது.

சுதந்திரக்கட்சியின் கண்டி மாவட்ட எம். பி. கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு பதிலாக சந்திரிகா விஜயகுமாரணதுங்காவை எம். பியாக பாராளுமன்றத்திற்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதே வேளை கட்சியின் நிர்வாக வேலைகள் அனைத்தும் அனுருத்த ரத்வத்தையிடம் ஒப்படைக்கப்படலாம் எனத்தெரியவருகிறது.

இச்சமரச முயற்சிகள் பயனளிக்கத் தொடங்கியுள்ளதாக கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## புதிய வெற்றிடம்

# யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும்

# பதிவு செய்தல் - 1993

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 டிசம்பர் 15 ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

1. எழுது பொருள்கள்
2. புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலக தளபாடம் - மரம்
4. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுக்கள் முதலியன)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
6. சகலவகை ஹாட்வெயார் பெயிண்டுகள், வார்னிஷ்
7. இயந்திரக் கருவிகளும் உதிரிப்பாகங்களும்
8. மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், ஜன்னல் திரைச் சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன.
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருள்களும் கண்ணாடிப்பொருள்களும்
12. மரம்
13. கட்டடப்பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. துப்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள், முதலியன.
15. டயர்கள், டியூப்புக்கள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புக்களும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்புச் சாதனங்களும் பாதுகாப்புச் சாதனங்களும்
21. மழைக்கோட்டுக்கள் சேற்றுச் சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.
22. பைப்புகளும் பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருள்கள், கண்ணாடிப்பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புகள்

### சேவைகள்:-

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்.
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்.
3. குளிர் சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்தவேலைகளும், பராமரிப்புக்களும்.
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்.
5. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
6. கதிரைகள் பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச் சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப் பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் ''பைண்டிங்'' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்:-

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தல்
3. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
4. மின்சார வயரிங் வேலைகள்
5. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் / திருத்த வேலைகள்
6. இரும்பு கிறில்கள் / கேற்றுகள் உருவமைத்தல் / பொருத்துதல்
7. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் / பொருத்துதல்.

# டிப்புளோமா பயிற்சி கிளிநொச்சியில் ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவகம் நடாத்தும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான டிப்புளோமா மேல்படிப்பு பயிற்சிநெறி கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் நடத்துவதற்கு தொலைக்கல்வி திணைக்களத்தின் பணிப்பாளர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இப்பயிற்சிநெறி சென்ற மாதம் 23ஆம் திகதி நடக்க இருந்த போதிலும் 31ஆம் திகதியில் இருந்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இதற்கு முற்பட்ட காலத்தில் இப்பயிற்சிநெறி யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. (16)

# சட்டவிரோததொழில் முகவர் தண்டனை பெறுவர்

(கொழும்பு)

நாட்டில் அனுமதி பெறப்படாத சட்டவிரோத தொழில்முகவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவின் தலைவர் டேவிட் சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இப் பதியப்படாத முகவர் நிலையங்களினூடாக வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வோர் அங்கு வேலையின்றி தவித்துக் கொண்டிருக்கின்றனரென்றும், இந்நிலையை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு கொழும்பு ஜாவத்தையிலும், கொம்பனித்தெரு ரக்ஷனமந்திர நிலையத்திலும் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு தகவல் நிலையத்தோடு தொடர்பு கொண்டு சரியான தகவல்களைதெரிந்து கொண்ட பின்னர் வெளிநாடு செல்லுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தவறிவிட்டது

பசுபதி-சிவசுப்பிரமணியம் என்பவருடைய 690963256v இலக்கமுடைய ஆனந்தபுரம் கிளிநொச்சி என்ற விலாசமிடப்பட்ட அடையாள அட்டையுடன் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பிரயாணப் பை ஆலங்கேணி ஒமந்தைக்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரிகளில் ஒப்படைக்கவும்.

பசுபதி சிவசுப்பிரமணியம்
கதிரவேற்பிள்ளை வீதி,
புலோலி மத்தி,
பருத்தித்துறை

அல்லது

க. பாலகிருஷ்ணன்
தபால் அலுவலகம்,
கிளிநொச்சி.

(சி-5351)

## அறிவித்தல்

**இந்துமத குருமார் ஒன்றியம்**
**38/1 கடையிற்சாமி ஒழுங்கை,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

பதிவு இல;- HA/4 /JA/ 169

இலங்கை இராணுவ நடவடிக்கையால் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த இந்துமத குருமார்களுக்கு எமது இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பில் முதல் கட்ட நிவாரணமாக சீருடைகள் இலவசமாக வழங்க தீர்மானித்துள்ளோம் எனவே தங்கள் பெயர்களை குடும்ப அட்டையுடன் வந்து எமது காரியாலயத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
சிவஸ்ரீ வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்
செயலாளர்

(சி-5349)

## நினைவு கூருகின்றோம் ... 1992-11-04

# பதவி வெற்றிடம்

## புங்குடுதீவு- நயினாதீவு ப.நோ.கூ. சங்கம் (வ.து)

# கணக்காளர் தரம் 111

**கல்வித் தகைமைகள்:-**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்திற்கமைய கணக்குப் பதிவாளர்/ கணக்கு எழுதுனர்/ கணக்காய்வு எழுதுனர் பதவியிலான மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறையிலான இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் கணக்கியல் தொடர்பான நான்கு வருட அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தரம்) / க.பொ.த (உயர்தரம்) கணக்கியல் உள்ளடங்கிய மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்:- 1005-1705 (இத்துடன் கூ ஆணைக் 40x5-50x10 குழுச் சுற்றுநிருபத்திற்கு அமைய சகல படிகளும் வழங்கப்படும்)

பிணை:- ரொக்கம்: 2000/-, ஆதனம்: 3000/-

வயதெல்லை:- 23 - 40 வருடங்கள்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 21-11-1992.

சங்க எல்லைப்பரப்பிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்:- பதில் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ கூ. சங்கம், இல 201/1 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பதில் பொது முகாமையாளர்
புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ கூ சங்கம்
யாழ்ப்பாணம்.

(சி-5347)

---

7. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் l பொருத்துதல்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள் l சேவைகள் 1993'' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் / சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும்

ஒவ்வொரு விண்ணபத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150 l- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்குப்பெறப்பட்ட காசுக்கட்டளை l தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும், ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் l சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6 வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன்வசதிகள்

**குறிப்பு:**

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் தகவல்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல் சேவை 3-க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்கத் திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புததகத்தின் போட்டோப் பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) ஏனையோர் ICTAD/ ID /02 (இரு பிரதிகள்) ICTAD/ ID/ 01 ஐயும் ICTAD, 123 விஜயராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி - வவுனியா மாவட்டத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அததுடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்துக்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை ( 7 இற்கு மட்டும் ) தருக.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி /5295)

---

# 1992-11-04

1987-ம் ஆண்டு இதேதினத்தில், காரைநகர்- களபூமி, வீமன்காமம், கோண்டாவில் பகுதிகளில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தாய், தந்தை மூன்று பிள்ளைகள்- மற்றும், ஒரு சிறுவன் உட்பட 12 தமிழர்கள்

1988-ம் ஆண்டு பச்சனூர்ப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது உதவியாளர் காளிராஜா.

புங்குடுதீவில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட புங்குடுதீவு, 10-ம் வட்டாரத்தைச் சேர்ந்த மூன்று கடற்றொழிலாளர்கள்.

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் - தச்சன்காடு, சிறிலங்காப்படையினரின் மின்முகாம் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**றொபேக்கா** (வனிதா பொன்னையா - தம்பகாமம், பளை - யாழ். )

**பபித்தா** (பாலசாந்தினி பாலசிங்கம் - குப்பிளான் தெற்கு - யாழ். )

மாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மறவன்** (சிங்கராஜா சிறிகாந்தரூபன் - முல்லைத்தீவு)

திருக்கோணமலை - நெடுங்கேணிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

**லெப். கனகு** (தியாகராசா கோணேஸ்வரன்- மேன்காமம்- திருக்கோணமலை)

**இலட்சுமணன்** (தில்லையம்பலம் சிவராசா - கங்குவேலி, மூதூர் - திருக்கோணமலை)

**கணேஸ்** (டேவிட் சில்வா விக்கினேஸ்வரன் - தம்பலகமம் - திருக்கோணமலை)

மன்னார் - விடத்தல் தீவுப்பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5348)

சிந்தனைக்கு

காலத்தை நாம் விரயமாக்கினால்
காலம் நம்மை விரயமாக்கும்
-- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 04.11 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## காலக்கெடு

வடக்கு கிழக்கு யுத்தத்தை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிவிற்கு கொண்டுவர வேண்டும் என சிறிலங்காப் பிரதமரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

இதேபோன்றே பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான மங்களமுனசிங்காவும் டிசம்பர் மாத இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு கண்டுவிடலாம் எனத் தான் கருதுவதாகவும் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இதுசிறிலங்கா அரசியல்வாதிகளும் இராணுவத் தளபதிகளும் இனப்பிரச்சினைக்குதீர்வு காணவென விதிக்கும் முதற் காலக்கெடுவல்ல. அதேபோன்று இக்காலக்கெடுக்கள் குறித்து நாம் எழுதும் முதலாவது ஆசிரியர் தலையங்கமுமல்ல. இக்காலக்கெடுக்கள் புதியன அல்லாவிடினும் ஒவ்வொரு காலத்திலும் நிலவும் அரசியல் சூழ்நிலை வேறாகையால்அதுகுறித்துஎழுதவேண்டியுமுள்ளது.

1979 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா பிரிகேடியர் திஸ்ஸவீரதுங்காவை டிசம்பர் மாதத்திற்குள் தீவிரவாதத்தை ஒடுக்கிவிடுமாறு யாழ். மாவட்டத்தின் தளபதியாக நியமித்தார். இதன் பின்னர் சிறிலங்காவில் பாதுகாப்பு அமைச்சர்களாகவும், தளபதிகளாகவும் இருந்த சகலரும் தீர்விற்கான காலக்கெடுவை விதித்தே வந்சனர். இதில் சிலர் பலதடவை காலக்கெடுவை விதித்துமிருந்தனர். இந்த வரிசையில் தற்போதைய பிரதமரும். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா விதிக்கும் இரண்டாவது காலக்கெடு இதுவாகும்.

இவ்வருட மத்தியில் இதேபோன்றே திரு. டி. பி. விஜயதுங்கா இரண்டு மாதத்திற்குள் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படுமெனவும், புலிகளின்முடிவு காலம் அண்மித்துவிட்டதாகவும் தெரிவித்தார். கூட்டுப்படைநடவடிக்கைதலைமையலுவலகத்திடம் இருந்து அதிகாரங்கள் முப்படைகளின் கையில் மாறியிருந்த நிலையில் முப்படைத் தளபதிகள் கொடுத்த நம்பிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரி

# 'கஜபாபுர' என்ற பெயரில் செட்டிகுளத்தில் பாரிய குடியேற்றம்

## -தமிழர்களை பௌத்தத்தில் சேரவற்புறுத்து

(வவுனியா)

'கஜபாபுர' என்ற பெயரில் செட்டி குளம் பிரதேசத்தில் உள்ள பல தமிழ்க்கிராமங்கள் சிங்கள மயப்படுத்தப்படுகின்றன. இதற்காக நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் பௌத்த பிக்குகளினாலும், இராணுவத்தினாலும் இப்பகுதிக்கு அழைத்துவரப்படுகின்றனர்.

அங்குள்ள முத்துமாரியம்மன் கோவில் முற்றாகத் தகர்க்கப்பட்டு அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை ஒன்று கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் வீடுகள், கடைகள், மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் முற்றாக அழிக்கப்படுகின்றன.

திருக்கோணமலையிலிருந்து அழைத்துவரப்பட்ட கட்டடப் பணியாளர்கள் மூலம் 800 புதிய வீடுகள் க டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் வீடுகளில் சிங்களக் குடும்பங்கள் தங்க வைக்கப்படுவார்கள் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சமீபத்தில் இந்தியாவிலிருந்து திரும்பிவந்து செட்டிகுளம் அகதிமுகாமில் தங்கியுள்ள சுமார் 150 தமிழ்க் குடும்பங்களை பௌத்த மதத்தில் சேரும்படியும், தமிழ்ச் சிறுவர்களை பௌத்த பிக்குகளாகும் படியும் இராணுவ அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

அரசின் இத்திட்டமிட்ட சிங்கள மயப்படுத்தும் திட்டம் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள தமிழ் மக்கள் மத்தியில் வேதனையையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசின் இப்புதிய ஆக்கிரமிப்புத்திட்டம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிலப்பகுதியை சிங்கள மயப்படுத்தும் நோக்குடன் தமிழர்களின் காணிகளில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

பெரியபுளியாலங்குளம், முதலியாகுளம், அடம்பன்குளம், பெரியகுளம், வீரபுரம் ஆகியகிராமங்களுடன் மேலும் பல தமிழ்க்கிராமங்களை இணைத்து 'கஜபாபுர' என்ற பெயரில் இக்குடியேற்றத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

முற்றிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த இப்பகுதியிலேயே இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இக்கிராமங்களிலிருந்து 1990 ஜூன் மாதம், அனைத்து தமிழ்க் குடும்பங்களும் இடம்பெயர்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் உள்ள தமிழ் மக்களின் வீடுகளும், கடைகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பாரிய பௌத்த விகாரை கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்குள்ள முத்துமாரியம்மன் ஆலயக் கட்டடம் முற்றாகத்தகர்க்கப்பட்டுள்ளது

புதிதாக 800 வீடுகள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கும் அரசாங்கத்தினால் எண்பத்தையாயிரம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

அங்கு அகதிமுகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதி மக்களை நாடிச் செல்லும் இராணுவ அதிகாரிகளும், பிக்குமாரும் அம் மக்களை பௌத்த மதத்தில் இணையும்படி வற்புறுத்தி வருகின்றனர். தமிழ்ச் சிறுவர்களை பிக்குகளாக்கி புதிதாகக் கட்டப்படும் விகாரையில் சமயப் பணிபுரிய வைப்பதாகவும் கூறியுள்ளனர். சமீபத்தில் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் அதிகாரிகள் இதைக் கண்டித்துள்ளனர்.

வற்புறுத்தி மக்களை வேறொரு மதத்தில் இணைக்கும் நடவடிக்கை பற்றி வவுனியா பிரஜைகள் குழுத்தலைவர் திரு.சொர்ணபாலா வேதனையுடன் அரசாங்க அதிபருக்கு சுட்டிக்காட்டியபோதுஅருகில் இருந்த இராணுவ அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர். இக் கூட்டத்தில் புதிய குடியேற்றத் திட்டம் பற்றி எவரும் பேசவில்லையாம்.

'கஜபாபுர' என்ற பெயரில் உருவாகும் இப்பகுதியில் விவசாய பண்ணை ஒன்று பெரியளவில் உருவாக்கப்பட்டு வருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# அம்பாறை அகதிமுகாமிற்கு நிவாரண விநியோகம் நிறுத்தம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாய்ந்தமருது கமநல சேவை நிலைய அகதிமுகாமில் உள்ள அகதிகளுக்கு ஆகஸ்ட் மாதம் முதல் உலர் உணவு பங்கீடுகள் யாவும் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அகதிமுகாமில் இருக்கும் 275 அகதிகளும் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கின்றனர். இவ் அகதிகளை வீடு திரும்புவதற்கு நிர்ப்பந்திக்கும் முகமாகவே உலர் உணவுப் பங்கீடு நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது அகதிகளுக்கான குடிசைகள் கூட திருத்தப்படாது படுமோசமான நிலையில்இவ் அகதிகள் பட்டினியை எதிர் நோக்கி இருப்பதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்புக்கான அமைச்சு மட்ட ஒருங்கிணைப்பு குழுவில் நவசமசமாஜக் கட்சியின் பிரதிநிதியாக இருக்கும் திருநாவுக்கரசு அமைச்சர் தயாரத்னாவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

# தமிழர் ஆசிரியர் சங்கத்தை சீரழிக்க

# புனர்வாழ்வு நிதிபெறும் சில நிறுவனங்கள் மோசடி

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு பணியில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டு கொழும்பில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாட்டு மனித நேய ஸ்தாபனங்களிடம் உதவி பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் அலுவலகங்களை நிறுவிச் செயற்படும் இந் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வுப் பணிகளுக்கெனப் பெறும் உதவிகள் இதுவரை யாழ்ப்பாணத்தை வந்தடையவில்லை என்று யாழ் அரச சார்பற்ற நிறுவன வட்டாரங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் மொத்தம் பதினைந்து அரசு சார்பற்ற மனித நேய ஸ்தாபனங்கள் இணைந்து செயற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஆண்டு கொழும்பில் "லோ ஏசியா" மாநாடு

ஆசிய பசுபிக் சட்ட அமைப்பின் மாநாடு அடுத்த வருடம் கொழும்பில் நடைபெற உள்ளது.

இம் மாநாட்டில் சுமார் 800 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருக்கின்றனர். "லோஏசியா" என்ற மேற்படி சட்ட அமைப்பின் மாநாடு அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெற இருப்பதாக மேற்படி அமைப்பின் தலைவர் அஜிந்தாகுரே தெரிவித்தார்.

ஐந்து நாட்கள் நடைபெற இருக்கும் இம் மாநாட்டில் முன்னணி நீதிபதிகள், சட்டத்தரணிகள், ஜூரர்கள், சட்டக் கல்விமான்கள் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்

முன்னேற்றப் பாச்சலில் ஆசியா சட்டத்தில் நாம் என்ற தலைப்பில் இவர்கள் ஆராய்வார்கள் சொத்துச் சட்டம், வர்த்தகம், மனித அடிப்படை உரிமைகள், சுற்றுலாச்சட்டம் கிரிமினல் சட்டம் முதலானவிடயங்களும் பிராந்திய அடிப்படையில் ஆராயப்படும். இரண்டு வருடத்துக்கு ஒரு முறை நடைபெறும் இம் மாநாடு கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது.

# வெள்ளிமணல் மக்களுக்கு நீர் விநியோகம் வெட்டு

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள வெள்ளிமணல் கிராமத்திலுள்ள தமிழ் மக்களுக்கான நீர் விநியோகம், சிறிலங்கா அரச அதிகாரிகளால் தடுக்கப்பட்டுள்ளது.

மாதம் தோறும் 500 ரூபா செலுத்தினால் மட்டுமே வெள்ளிமணல் கிராமத்திற்கு நீர் விநியோகம் செய்யப்படும் என அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிகாரிகளின் நடவடிக்கை தொடர்பாக அரச உயர் மட்டத்திடம் இக்கிராம மக்கள் முறையீடு செய்திருந்த போதிலும், அதுகுறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நீர் தட்டுப்பாடு நிலவும் வெள்ளிமணல் கிராமத்திற்கு கந்தளாய் குளத்திலுள்ள நீர்தாங்கி மூலமே நீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

# நல்லின தென்னங்கன்றுகள் விநியோகிக்க ஏற்பாடு

(நல்லூர்)

தென்னைச் செய்கையாளர்கள் வீட்டுத் தோட்டத்திலோ அல்லது தோட்டத்திலோ நடுவதற்கு தேவையான நல்லின உயர்வர்க்க தென்னங்கன்றுகள் தேவைப்பட்டால் தென்னைப்பயிர்ச் செய்கைச்சபை, நல்லூர் தென்னை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஜெ. சத்தியேந்திரனிடமும், குடாநாட்டிலுள்ள கமநல சேவை நிலையங்களுடனும் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னைநடுகை தென்னை மரங்களுக்கு உரிய உரப்பிரயோகம் பற்றிய ஆலோசனைகளை தென்னை அபிவிருத்தி உத்தியோகஸ்தரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறியிருந்த நிலையில் முப்படைத் தளபதிகள் கொடுத்த நம்பிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்திருந்தார். ஆனால் பிரதமர் எதிர்பார்த்த அவ் இரண்டு மாத காலத்திற்குள் இராணுவம் எதிர்பாராதபின்னடைவைச்சந்தித்தது. பிரதமரின் இக்காலக் கெடுதோல்வியில் முடிவடைந்ததையிட்டுவிமர்சனம் செய்த ஓர் சிங்களப் பத்திரிகையாளர் ''யாருக்கு முடிவுகாலம்'' என்று கேட்கத் தோன்றுகின்றதென்றார்.

ஆனால் மீண்டும் திரு.டி,பி.விஜயதுங்கா இரண்டு மாத காலக்கெடு விதித்துள்ளமை அவரது அரசியல் ஞானத்தைப் பற்றியே கேள்வி எழுப்புகின்றது இதேவேளை திரு.டிபி விஜயதுங்காமுன்னர்போன்று அல்லாமல் இக்காலக்கெடுவிற்குள் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவர இராணுவத்தினர் ஒத்துழைப்புத் தர வேண்டும் எனக் கோரியுள்ளமை அவர் பக்கத்தில் உள்ள பலவீனத்தை ஓரளவு உணர்ந்துள்ளதாகவே தெரிகின்றது.

இருப்பினும் இரண்டு மாதகாலத்திற்குள் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர ஒத்துழைக்குமாறு கோருவதென்பது இறந்த கால நிகழ்கால நடத்தைகளை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் டி. பி. விஜயதுங்கா விளங்கிக் கொள்ளவோ, அன்றி அதைப் பற்றிக் கரிசனை காட்டவில்லை என்றோ தோன்றுகின்றது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்தான் இவ்வாறான நிலையில் இருக்கின்றார் என்றால், பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்காவும் அவ்வாறு இருப்பது ஆச்சரியமாகவுள்ளது. அவரது தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பெரும்பாலான கட்சிகள் நிராகரித்துள்ளதோடு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்ட கோரம் இல்லாத நிலைதோன்றியுள்ள நிலையில் டிசம்பருக்குள் தீர்வு ஏற்படும் என திரு.மங்களமுனசிங்கா கூறுவதினாலேயே மேலே எழுப்பப்பட்ட கேள்விகளை கேட்கத் தோன்றுகின்றது.

ஆனால் இனப்பிரச்சினை காலக்கெடுவுடன் கூடிய இராணுவ நடவடிக்கைகளினால் தீர்த்துவிடக்கூடிய தொன்றல்ல என்பதை சிங்கள அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு கடந்த பத்து வருட காலவரலாறே போதுமானதாகும். அத்தோடு தீர்விற்குரிய அரசியல் சூழ்நிலை உருவாக்கப்படாமல் எந்தவித அரசியல் தீர்வும் சாத்தியப்படப் போவதில்லை என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# கல்விப் பணிப்பாளர் முற்படுகிறார்

## - ஆசிரியர் சங்கம் கண்டனம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நடவடிக்கைகள், தொழிற்பாடுகள் தொடர்பாக கொழும்பிலுள்ள தொழிற்சங்க ஆணையாளருக்கு, சங்கத்தினை சீரழிக்கும் நோக்குடன் தவறான தகவல்களை யாழ். கல்விப்பணிப்பாளர் இரகசியமாகக் கொடுத்தமையையும் அவரின் தேவையற்ற நடவடிக்கைகளுக்கும் சங்கத்தின் செயற்குழு தனது வன்மையான கண்டனத்தை ஏகமனதாகத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

சங்கத்தின் தலைமைப்பணிமனையில் கூடிய செயற்குழுக் கூட்டத்திலேயே கீழ்வரும் கண்டனத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. தொழிற்சங்க ஆணையாளருக்கு இ.த.ஆ.ச. தொழிற்பாடு, நடவடிக்கைகள் தொடர்பாக தேவையற்ற தவறான தகவல்களை இரகசியமாகக் கொடுத்தமை, இது சங்கத்தை சீரழியச் செய்யும் நோக்கமுடையதாகச் சங்கம் கருதி, தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

2. தமிழ் மொழி அமுலாக்கம் தொடர்பாக இருவார காலத்தினுள் சங்கத்திற்கு எழுத்துமூலமான உறுதி தரப்படாதவிடத்து நேரடித் தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பது. இம்முன்னறிவித்தலை உடனடியாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வருதல்.

3. பொதுச் செயலாளரின் பழிவாங்கல் இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி செயற்குழு விடுத்த வேண்டுகோளை பணிப்பாளர் ஏற்றுக்கொள்ளாது நிராகரித்தமையை செயற்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் இவ் விடயத்தை மத்திய மாகாண அமைச்சுக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி செயற்குழு ஏகமனதான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பொதுச் செயலாளரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி கல்வி அமைச்சை கோரும்படி ஏனைய தொழிற்சங்கங்களையும் கோருவதென செயற்குழு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

4. செயற்குழு உறுப்பினர்கள் ஐவர் கொண்ட குழு பணிப்பாளருடன் நடாத்திய மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது கொள்கையளவில் ஏற்றுக்கொண்டவற்றில்பலதீர்மானங்களை பின்னர் நிறைவேற்றத் தவறியமையை செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிர்காலத்தில், தமிழ் மொழிக்கொள்கை அமுலாக்கம் தொடர்பாகவோ அல்லது, பொதுச் செயலாளரின் இடமாற்றம் தொடர்பாகவோ மேற்கொண்டு பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில்லையெனவும்சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

# 29 பொலிஸ் அதிகாரிகளும் எல்லைப் பகுதிக்கு சென்றனர்

(கொழும்பு)

துரித சுடுபடைக்கலன் பயிற்சிகளை வழங்கி எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்துவதற்கென 29 பொலிஸ் அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை முதல்வடக்கு-கிழக்குஎல்லைக் கிராமங்களுக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

12 உதவிப் பொலிஸ் அதிபர்களும், 17 பிரதம பொலிஸ் அதிகாரிகளும் இத்திட்டத்தின் கீழ் கடந்த வாரம் 3நாள் உயர் பயிற்சி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இதற்கென இவர்கள் திடீர்பதவி உயர்வு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச மருந்துக்களஞ்சியம் டிசம். மாதம் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மருந்துக் களஞ்சியம் வரும் டிசம்பர் மாதம் முழுவதும் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும்.

டிசம்பர் முதலாம் திகதி முதல் 31-ம் திகதிவரை மூடப்பட்டிருக்கும் காலத்தில் மருத்துவ வாயு (மெடிக்கல் காஸ்) மற்றும் அத்தியாவசிய மருந்துகள் தவிர வேறு எந்த மருந்து வகையும் விநியோகிக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாகாண சுகாதார அத்தியட்சகர்கள் சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. தேவையான மருந்து வகைகளை டிசம்பர் முதலாம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

திரனிடமும், குடாநாட்டி ... விக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் சிந்திய குருதி விருதலையைப் பெறட்டும்

(யாழ்ப்பாணம்)

நாம் சிந்தும் குருதி தமிழீழத்தை அமைக்க ஆறுகளாகப் பாயட்டும், அவை சேறுகளாக்கப்பட்டு விடக்கூடாது என்றே களத்தில் நிற்கும் போராளிகள் விரும்புகின்றனர் என்று யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடந்த வலி வடக்கு கடற்புலிகளின் மாதாந்த மாவீரர் நினைவு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், எமது மக்கள் ஒவ்வொருவரும் இந்த மாவீரர்களின் இலட்சியக் கனவுகளை நிறைவுபெறச் செய்ய உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வலிகாமம் வடக்கு பிராந்திய பொறுப்பாளர் வேதியன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்தங்கன், வடமராட்சி வடக்குப்பொறுப்பாளர் வரதன் உட்படப் பல பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர். (ச)

# நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு டிசம்பரில் பரீட்சை

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற உள்ளது

மொழி பெயர்ப்பாளர்கள், கணக்குப்பதியுநர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், சிறாப்பர்கள், பண்டகசாலைக் காப்பாளர்கள், பொது எழுதுவினைஞர் சேவையில் உள்ள பட்டதாரிகள் போன்றோர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இவர்கள் இம்மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

# ஒக்ஸ்பாம் உதவியுடன் குளம் புனருத்தாரணம்

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் பூநகரிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வேலைவாய்ப்பற்றிருக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்நோக்கத்துடன் ஜெயபுரத்திற்கு அண்மையில் உள்ள பண்டிவெட்டிக் குளத்தை புனருத்தாரணம் செய்யும் வேலை பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டு அவ்வேலை முடிவுறும் நிலையில் உள்ளது இவ் வேலைத் திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களும் ஒக்ஸ்பாம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை அமுல்படுத்துவதனால் குளத்தில் கூடியளவு நீரை சேமிப்பதுடன் கோடை காலத்தில் தோன்றும் வரட்சி நிலைமையைப் போக்கலாம், மக்களின் அன்றாட தேவைகளுக்கும் இந்நீரை பயன் படுத்தலாம் என்பதுடன் வீட்டுத் தோட்டம் செய்வதற்கு உந்து சக்தியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (16)

# ஈழநாதம்

### கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கல்விக் கூடம் நடாத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும். இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை செயலாளர், பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அவர்கள் விரிவுரையாற்றுவார்.

# சிங்க வீரம் குறைந்துவிட்டது எல்லாளர் தாக்குகின்றனர்

## இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கவலை

[றாகம]

''இன்று எங்கள் சிங்க வீரம் குறைந்துவிட்டது எல்லாளர்கள் எம்மை இலகுவாக தாக்குகிறார்கள் நீங்கள் வீரதுட்டகைமுனுக்களாக மாற வேண்டும்'' இவ்வாறு றாகம ''ரணவீர செவன்'' இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் ஆர். நோமன் கதன பால சிங்கள இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்,

றாகம, கதங்கமுவவிலுள்ள பௌத்த விகாரை சமய பாடசாலை தொடக்க விழவில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்

அவர் மேலும் பேசுகையில், இராணுவத்தில் சேருபவர்களின் தொகை இன்று வெகுவாக குறைந்துள்ளது. வாய்வீச்சு அரசியல் வாதிகள் தொகை நாட்டில் அதிகரித்து வருகிறது. நாட்டுப் பற்றும் இனப்பற்றும் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுவருகிறது. நம் இனத்தின் கழுத்து நெரிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

எனவே இந்நிலையிலிருந்து நாட்டைக் காக்கவேண்டுமாயின் சிங்கள பௌத்த இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து கொள்ளவேண்டும் இளைஞர்களிடம் அருகிப் போய்க்கொண்டிருக்கும் இன, மொழி, நாட்டுப்பற்றை சமயப் பாடங்களை கற்பிக்கும் விகாரையிலுள்ள பாடசாலைகள் வளர்த்தெடுக்க வேண்டும் என்றார்.

## பேராறை கடக்க பாலம்

### மன்னார் - வவுனியா இணைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்துக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் இணைப்பை ஏற்படுத்தும் ஒரே ஒரு காட்டு வழிப்பாதையான வண்ணான் குளம் வீதியில் பொது மக்களின் நலன்கருதி புதிய பாலம் ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா மாவட்டக் கிளை மேற்படி பாலத்தை உள்ளூர் வளங்களைப்பயன் படுத்தி அமைத்துள்ளது. இப் பாலம் தற்பொழுது பொது மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டிருக்கிறது.

மேற்படி வீதிக்கு குறுக்காக ''பேராறு'' என்று அழைக்கப் படும் நீரோடை உள்ளது இது மழை காலத்தில் பெருக்கெடுப்பது வழமை, இதனால் இவ் வீதியூடான சகல போக்குவரத்துகளும் துண்டிக்கப்படுவதுண்டு. இதனால் இவ் வீதியூடாகச் செல்லும் பொதுமக்கள் நீண்டகாலமாக சிரமங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர். இப்பாலம் அமைக்கப்பட்டதனால் பொது மக்கள் எதுவித சிரமமும் இன்றி இப் பாதையூடாகப் பயணம் செய்யக் கூடியதாக உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## போலி வெளிநாட்டு முகவர் சிங்கப்பூரில் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து ஆட்களை வெளிநாடுகளுக்கு கடத்தும் கும்பலொன்று சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இக் குப்பலைச் சேர்ந்த நாற்றி நாற்பது பேரில் நாற்பத்து இரண்டு பேர் இலங்கையர்களாவர். இவர்கள் போலியான ஆவணங்களைத் தயாரித்து சிங்கப்பூர் விமான நிலையம் ஊடாக மேற்கு நாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வந்தனர் எனவும், இவர்கள் ஆறு குழுக்களாகச் செயற்பட்டு வந்தனர் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாம்கள்

(யாழ்ப்பாணம்)

மாதம் 7 ஆம் திகதி முதல்

புதிய

குதல்களை எவ்வளவு காலத்துக்கு தொடரலாம் என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகும் என அவர் தெரிவித்தார்.

காங்கேசன் துறை

வசதிகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலைத் துறை முகத்திலிருந்து கடற்படைப் படகுகள் தீபகற்பத்தைச் சுற்றியுள்ள கடலில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் நேரம் வீண் விரயமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் ரோந்து மற்றும் புலிகளின் நடமாட்டத்தைத் தடை செய்யும் நடவடிக்கையில் மூன்று ராடர்க் கருவி பொருத்தப்பட்ட படகுகள் பாவனையில் உள்ளன. இவை எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதோடு பதினைந்து அதிவேகத் தாக்குதல் படகுகளுக்கும் கட்டளைகள் பிறப்பிக்கின்றன அத்துடன் யாழ் கடல்நீர் ஏரிப் பகுதிகளிலும், தீவகங்களிலும் ஆழம்

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## பாடசாலைக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சிமாவட்டப் பாடசாலைகளுக்கிடையே கொத்தணிமட்டத்திலான 1992 ஆம் ஆண்டிற்கான மாவட்ட பெரு விளையாட்டுப் போட்டி நடைபெற்றுவருகின்றன. இவ் விளையாட்டுக்கள் 17 - 10 - 92 ஆம் திகதி தொடங்கி 7-11-92 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இவ் விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களுக்கான போட்டிகளும் ஆசிரியர்களுக்கான போட்டிகளும் நடைபெற்றுவருகின்றன. இப் போட்டிகளில் வலைப்பந்து உதைபந்து, தாச்சி, கைப் பந்து, போன்ற விளையாட்டுக்கள் அடங்குகின்றன.

இதன் இறுதிப் போட்டிகள் அனைத்தும் 8 - 11 - 92 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு கிளி/கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற உள்ளதாக கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தெரிவிக்கின்றார். (16)

### மண்டூர் பகுதி மக்கள்

## நகரத்திற்கு செல்ல பாஸ் பெற வற்புறுத்து

மட்டக்களப்பிற்கு மேற்கேயுள்ள மண்டூர் கிராமத்திலிருந்து நகர்ப்பகுதிநோக்கிவரும் பொதுமக்கள் அனைவரும் இராணுவத்திடமிருந்து அனுமதிச்சிட்டை பெறவேண்டும் என இராணுவத்தினர் வற்புறுத்தி வருகின்றனர்.

மண்டூரிலிருந்து புறப்படுவோர் வெல்லாவெளி இராணுவ முகாமை அடைந்ததும் தங்களது அடையாள அட்டையைக் காண்பித்து ''பாஸ்'' ஒன்றைப் பெறவேண்டும்.

பின்னர் அவர்கள் தங்களது கிராமத்திற்குத் திரும்பும் போது அந்த பாஸை இராணுவ முகாமில் ஒப்படைத்துச் செல்லவேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர்.

இதன்காரணமாக வெளியூரில் இருந்து மண்டூருக்குச் செல்லவும் மக்கள் தயங்குகின்றனர்.

பெண்

அச்சமயம் இது தொடர்பாக விசாரணை செய்ய வந்த மடுகந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் இவர் பிடிபட்டார்.

விசாரணையை தொடர்ந்து அப்பெண்ணிடம் களவாடப் பட்டதான தங்க நகைகளின் ஒருபகுதி இந்த இராணுவ கோப்ரலிடமிருந்து மீட்கப் பட்டதாகவும், இராணுவ கோப்ரல் தொடர்ந்து விளக்க மறியலில் உள்ளார் எனவும் தெரியவருகிறது.

வடபகுதியில்

திருக்கோணமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்திருந்தனர்

இந்த விஜயங்களினால் குறிப்பிட்ட தினத்தில் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெறவில்லை இதனால் வடபகுதி இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கும் திகதி நிர்ணயிக்கப்படவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மிரியான பகுதி பாடசாலைகளில் விசேட பொலிஸ் பாதுகாப்பு

மிரியான களனி, கோட்டே சிறி ஜயவர்த்தனபுர மாணவர்கள் மறியல் போராட்டம் செய்தமையை தொடர்ந்து மேற்படி பகுதிகளிலுள்ள பாடசாலை மற்றும் பல்கலைகழகம் என்பனவற்றில் விசேட பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கோட்டே ஆனந்த சன்தாதுல, கோட்டேபுனிததோமஸ் பாடசாலை மாணவரின் மறியல் போராட்டம் ஏனைய பகுதிகளுக்கு விரிவடையாது தடுக்கும் நோக்குடன் மேற்படி பாதுகாப்பு போடப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைகழக மாணவர்களிடையேயும், பாடசாலை மாணவர் இடையேயும் ஓர் குழப்ப நிலையை ஏற்படுத்த சமூக விரோத குழு ஈடுபட்டுள்ளதாக புலனாய்வு துறைக்கு தகவல் கிடைத்ததை தொடர்ந்து முன்னேற்பாடாக பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். பாடசாலை, பல்கலைகழக வளவுக்குள்ளும், வெளியேயும் வெளியார் உட்செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

இதனை தொடர்ந்து பாடசாலை மாணவர் வ்வு பாடசாலைகளில் வெகு க குறைந்து காணப்பட்டது

## வலதுசாரிகள் வன்முறை ஜேர்மனியில் அதிகரிப்பு

(பொன்)

ஏனைய நாடுகளில் மனித உரிமை மீறல்கள் குறித்து கண்டன விமர்சனம் செய்ய முடியாத அளவுக்கு ஜேர்மனியில் வலது சாரிகளின் வன்முறைகள் அதிகரித்து வருவதாக ஜேர்மன் நாட்டு வெளியுறவு அமைச்சர் குளோஸ்கிவ் செல் கடந்த வெள்ளியன்று தெரிவித்தார்.

மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துமாறு வெளிநாட்டுத்தலைவர்களிடம் தான் வேண்டுகோள் விடுக்கும் போது ஜேர்மனியில் இடம் பெறும் நிறவெறி மற்றும் யூத எதிர்ப்பு தாக்குதல்களை சுட்டிக்காட்டி அலட்சியமாக பேசுவதாக ஜேர்மன் வானொலிக்கு அளித்த பேட்டிபொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### சைவசித்தாந்த கண்காட்சி

ஞாயிறு தோறும் பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் மெய் கண்ட தேவர் சைவசித்தாந்த உயர் நிறுவனத்தின் சார்பில் சைவ சித்தாந்தக் கண்காட்சி நடைபெறுகின்றது. பழைய பிரசுரங்களைப் பிரதி செய்யவும், வாசிக்கவும், பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. சனி, ஞாயிறுகளில் இலவசமாகச் செய்து வரும் சேவையோடு கண்காட்சியும் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

### வவுனியாப் பகுதியில்

# முஸ்லிம் குண்டர்கள் தமிழ் மக்கள் மீது கெடுபிடி

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் முஸ்லிம் குண்டர்களின் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இவர்கள் முஸ்லிம் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் நின்று, தமிழர்கள் மீது கெடுபிடிகள் செய்துவருவதாக வவுனியா நகரிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம்பகுதியில் மீளசென்று தங்கியுள்ள முஸ்லிம்மக்களை தாம் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு பல விதங்களில் அப்பாவித் தமிழ்மக்கள் மீது கெடுபிடி செய்கின்றனர்.

தாம் புதிய போராட்ட அமைப்பு என்றுகூறிக்கொண்டு மாலை வேளைகளில் கூடும் இந்த முஸ்லிம்குண்டர்கள் அப்

அவர்கள் புதிய கட்டளை ஒன்றைப்பிறப்பித்துள்ளனர்.

தவிர இவர்களால் புலிகள் நடமாடுகிறார்கள் என்றுபுரளி கிளப்பப்படுவதும், சந்தேகத்திற்குரியவர்கள் என்று இராணுவத்திடம் அப்பாவித்தமிழ் இளைஞர்கள் காட்டிக்கொடுக்கப்படுவதும் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

சமீபத்தில், வவுனியாநகர்ப் புறம் ஒன்றில் வெடி குண்டு வைக்கப்பட்டுள்ளது என்று இவர்களால் பொலிஸாரிடம்

அலம்பில்

எடுத்த பாரிய முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும் இந்த இராணுவ நடவடிக்கையை

## பயிற்சி முகாம்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசிய கூடைப் பந்தாட்ட பயிற்சியாளர் சங்க ஆதரவில் 15 வயதுக்குட்பட்ட மாணவர் - மாணவிகளுக்கும் மத்தியஸ்தராகவும், பயிற்சியாளராகவும் திறமை பெற விரும்புவோருக்கும் கூடைப் பந்தாட்டப் பயிற்சி வழங்கப் படவுள்ளது.

இப்பயிற்சி முகாம் யாழ். பல்கலைக் கழக கூடைப் பந்தாட்ட மைதானத்தில் இம் மாதம் 7 ஆம் திகதி முதல் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் பெண்களுக்கும், மாலையில் ஆண்களுக்கும் இப்பயிற்சி நடைபெறும்.

பிரதம பயிற்சியாளராகச் சர்வதேச கூடைப்பந்தாட்ட பயிற்சியாளரும், மத்தியஸ்தருமான ராம் சுந்தரலிங்கம் கடமையாற்றுவார். பயிற்சியின்பின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

படகுகளுக்கும் கட்டளைகள் பிறப்பிக்கின்றன அத்துடன் யாழ் கடல்நீர் ஏரிப் பகுதிகளிலும், தீவகங்களிலும் ஆழம் குறைந்த கடல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்த கடற்படை பதினைந்து சிறு படகுகளைப் பயன்படுத்துகிறது. இப் படகுகள் வடபகுதியிலுள்ள கடற்படை முகாம்களிலிருந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

பகுதி இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கும் திகதி நிர்ணயிக்கப்படவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### 2500 ஆசிரியர்கள்

சபையின் செயலாளர் ஜோர்சப் மொன்டிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் ஆரம்ப பயிலுனர் ஆசிரியராக 1500 பேரும் கணித, விஞ்ஞான ஆசிரியராக 1000 பேரும் இடம்பெறுகின்றனர் என்றார்.

அலம்பில்

எடுத்த பாரிய முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும் இந்த இராணுவ நடவடிக்கையை முறியடிக்கவும், ஆக்கிரமித்த பகுதியை மீட்பதற்காகவும் 50 க்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்

அத்துடன் இராணுவத்தின் நடவடிக்கையால் மணலாற்று மக்கள் சொத்துக்களை இழந்து காடுகளிலும், அகதிமுகாம்களிலும் வாழ்ந்துவந்தமை குறிப்பிடத்தக்கது

தாம் புதிய போராட்ட அமைப்பு என்றுகூறிக்கொண்டு மாலை வேளைகளில் கூடும் இந்த முஸ்லிம்குண்டர்கள் அப்பகுதியில்நின்று தமிழ்ப்பொது மக்களைச் சோதனை செய்வதும், பொருட்களை ஆராய்ந்து பார்ப்பதுமாகச் செயற்படுகின்றனர்.

வவுனியா - மன்னார் வீதி வழியாக வேப்பங்குளம், நெலுக்குளம் நோக்கிச் செல்லும் தமிழ்மக்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் அந்த வீதியைப் பயன்படுத்தக்கூடாது என்றும்

சமீபத்தில், வவுனியா நகர்ப்புறம் ஒன்றில் வெடி குண்டு வைக்கப்பட்டுள்ளது என்று இவர்களால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் பொலிஸார் அச்செய்தியைக் கவனத்தில்கொள்ளவில்லைஎன்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

### கப்டன் அமுதினி நினைவு பாலர் பாடசாலை

வரணியில், மாவீரர் கப்டன் அமுதினி நினைவாக பாலர் பாடசாலை திறப்புவிழாவும், சிறுவர் விளையாட்டு போட்டியும் இன்று இடம்பெறவுள்ளன.

இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கரம்பைக்குறிச்சி மேற்கு வரணி இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இவ் விழா இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டினர் ஆதரவில் இடம் பெறவுள்ள இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு நவா சனசமூக நிலையத்தினரும், பாலர் பாடசாலை ஆசிரியரும் அழைப்பு விடுத்துள்ளனர்.

கந்துல

துல'வின் இழப்பு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கந்துல கப்பல்தான் திருகோணமலையிலிருந்து ஆனையிறவு, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் பகுதிக்கான விநியோகத்தை மாதாந்தம் கிரமமாக மேற்கொண்டு வந்தது

இதேவேளை கடற்படையின் 'ரணஜ' என்ற மற்றுமொரு கப்பலும் அதன் புறப்ளர்கள் ரங்கூரமிடும் சங்கிலியில் சிக்கிக்கொண்டதால் சேவையிலீடுபடுத்த முடியாத நிலையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.


5-11-92 முதல்

O/L

PAPER CLASS

யூனிவேர்சல்

கந்தர்மடம்-யாழ்ப்பாணம்

(5339)



வெளிவந்து விட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள்பார்வையுடன் கூடிய சைவநெறி (ஆண்டு 11) துரித மீட்டலுக்கான

வினா விடை

ஆக்கம்: க. சந்திரசேகரம்

வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

மக்மிலன் புத்தகசாலை

யாழ்ப்பாணம் (சி-5355)



**SRI LANKA RED CROSS SOCIETY**

**JAFFNA BRANCH**

APPLICATIONS ARE INVITED FOR THE FOLLOWING POSTS:

| | Post | Qualification required |
|---|---|---|
| 1 | Doctor | MBBS / RMP / AMP |
| 2. | Dispenser | GCE O/L with experience in dispensing. |
| 3. | PHI | PHI certificate-Public Health Certificate from National Institute of Health. |
| 4. | Nurse | Certificate from approved Nurses' training School. |
| 5 | Primary Health care Programme Officer. | Public Health Certificate and experience in Primary Health Care. |
| 6. | Radio Operator | PMG licence/City & Guild certificate in wireless operations. |
| 7. | Project Officer Youth affairs & Public support affairs | A/L, credit pass in English in O/L and experience in youth affairs and public relations. |
| 8. | Steno -Typist ( English ) | O/L with credit pass in English and experience in office work, and stenography |

( Retired persons also can apply )

Applications Should Be Sent To The Undermentioned on or Before 16-11-92

Date of Interview for 1-5: 28-11-92 (10.00 A. M)

Date of Interview for 6-8: 21-11-92 (10.00 A. M)

There will be no individual intimation for interview.

73, Kandy Road,
JAFFN.
03-11-1992.

Hony. Secretary.

(சி-5354)


### உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

**03. 11. 1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6482

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்-:

28-4441, 28-8751, 26-1728, 41-9997, 42-3964, 24-6378, 24-7327, 27-6821, 27-122, 24-5967, 28-3969, 41-3931, 26-2279.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-

26-2502, 26-6062, 24-8089, 26-1512, 24-8558, 26-6745, 27-1072, 27-1531, 27-2056, 26-1204, 26-6893, 27-6887, 27-9779, 27-9702, 27-3927.


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.